7. தகவல் கோரல்.

வினா நேரத்தில் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப் பட்டிருக்கும் வினாக்கள் குறித்து.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு முன்னாலே எழுப்பப்பட்ட பல பிரச்னைகளுக்கு இன்று ஓய்வாகத் தீர்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையை 5 நாட்களுக்கு முன்னாலே எழுப்பினேன். ஆளுங்கட்சி உறுப் பினர்களுக்கு நீங்கள், கேள்வி நேரத்திலே எவ்வளவு நேரம் ஒதுக்கியிருக்கிறேன் என்று தீர்ப்பு வழங்குகிறேன் என்று கூறினீர்கள். எப்பொழுது தீர்ப்பு வழங்க இருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்பு இல்லை, தகவல்தான். மார்ச் 4-ம் தேதி முதல், மார்ச் 23-ம் தேதி வரைக்கும், ஒவ்வொரு கட்சிக்கும் கொடுக்கப்பட்ட கேள்விகள், ஒரு உறுப்பினருக்குச் சராசரியாக எவ்வளவு கேள்விகள் கொடுக்கப்பட்டன என்ற நிலை யிலே சராசரி 10 கேள்வி வரும். அதிலே தி.மு. கழகத்திற்கு 6 கேள்விகள், காங்கிரஸ் (ஸ்தாபனம்) 21 கேள்விகள்; அ.தி.மு.க.விற்கு 19 கேள்விகள்; சி.பி.ஐ. 29 கேள்விகள்; பார்வார்ட் பிளாக்குக்கு 4 கேள்விகள்; முஸ்லிம் லீக்கிற்கு 18 கேள்விகள்; சுதந்திராவுக்கு 7 கேள்விகள்; காங்கிரசுக்கு 24 கேள்விகள்; தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சிக்கு 7 கேள்விகள்; தமிழ் அரசு கழகம் ஒன்றும் இல்லை; இன்டிபெண்டன்ட்ஸ் 10 கேள்விகள். ஒவ்வொரு கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களுக்கும் சராசரியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. 1974-75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 40,27,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".